**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.**

**O.S. No. 52/2018**

**நாள்.07.03.2026**

**வா.சா. 2 - பாலகிருஷ்ணன்**

**4 வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்வதற்காக அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. வாதி சொல்லி தான் நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். என்னால் தாக்கல் செய்யப்பட்ட நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். என்னால் தாக்கல் செய்யப்பட்ட நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் வாதி சொல்லி தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரியல்ல நான் வாதியிடம் 40 வருடங்களாக வேலை பார்க்கிறேன் அதனால் எனக்கு விபரங்கள் தெரியும். தாவா சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியும் சர்வே எண் 673. என்னால் தாக்கல் செய்யப்பட்ட நிரூபண வாக்குமூலத்தில் வாதி, பிரதிவாதிகளுக்கிடையே பாகப்பிரிவினை ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன் அந்த பாகப்பிரிவினை எப்போது ஏற்பட்டது என்றால் வாதி, பிரதிவாதிகளுக்கிடையே இதுநாள்வரை பாகப்பிரிவினை நடக்கவில்லை. வாதி, பிரதிவாதிகள் தாவா சொத்தை இதுநாள்வரை கூட்டாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். என்னால் தாக்கல் செய்யப்பட்ட நிரூபண வாக்குமூலத்தில் வாதி பிருதிவிராஜ் 1997 ல் நடைபெற்ற பாகப்பிரிவினையின்படி வாதிக்கு சொத்து கிடைத்ததாக சொல்வது பொய் என்றால் வாதி பிருதிவிராஜின் இடம் தான் ஆனால் பாகப்பிரிவினையின்படி அவருக்கு சொத்து கிடைக்கவில்லை. நான் வாதிக்காக பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**4 வது பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை.**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.03.07 17:56:44 +0530